16.12.2024 SC.No. 55/2017

சாட்சி : PW 1 செல்வி

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**குறுக்கு விசாரணை :**

1. நான் சம்பவம் நடைபெற்றதாக சொல்லும் தேதிக்கு முன்னர் 25.09.2014 நாச்சியப்பன் பெயருக்கு சர்வே எண்.47/6 கிரையப்பத்திரம் ஏற்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பெரியசாமி என்பவர் எங்கள் மீது தேவகோட்டை உரிமையியல் நீதிமனற்த்தில் அசல் வழக்கு எண்.14/2015 என்ற வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். அவ்வழக்கில் நானும் ஒரு தரப்பினர் என்றால் சரிதான். இவ்வழக்கில் அ.சா.2 மற்றும் 3 எனது உறவினர்கள் என்றால் சரிதான். இவ்வழக்கில் பார்வை மகஜரில் கையொப்பம் செய்த இராமநாதன் எனது தந்தை என்றால் சரிதான். இவ்வழக்கில் அ.சா.2 பூபதி சாட்சியம் அளித்த விவரம் எனக்கு தெரியும் என்றால் தெரியும், அவர் என்ன சாட்சியம் அளித்தார் என்று எனக்கு தெரியுமா என்றால் ஓரளவுக்கு தெரியும்.

2. பூபதி தனது சாட்சியத்தில் காளியம்மாள் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் போது வரவில்லை என்று சொல்லியுள்ளார் என்றால் காளியம்மாள் எனது மாமியார் வயது மூப்பின் காரணமாக பின்னால் வந்தார், நாங்கள் முன்னால் வந்துவிட்டோம். நான் எனது சாட்சியத்தில் காளியம்மாள என்னுடன் வந்ததாக சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரியல்ல நாங்கள் ஓடிவந்தோம் அவர் நடந்து வந்தார்.

3. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சர்வே எண்.47/6 கண்டுள்ள சொத்து எங்களுக்கு பூர்வீக பாத்தியப்பட்டதா அல்லது கிரையப்பாத்தியப்பட்டதா என்றால் பூர்வீக பாத்தியப்பட்டது. இது சம்பந்தமாக காவல் நிலையத்தில் ஆவணம் எதுவும் கொடுத்தோமா என்றால் 10 வருடங்கள் ஆகிவிட்டதால் ஞாபகம் இல்லை. குடிசை எரிந்தது சம்பந்தமாக தீயணைப்பு துறைக்கு தகவல் எதுவும் கொடுத்தோமா என்றால் இல்லை போலீஸ்சாருக்கு தகவல் கொடுத்தோம், முத்து ஊரணியில் இருந்து தண்ணீரை கொண்டு வந்து அணைத்தோம்.

4. நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தபின்பு எத்தனை நாள்களுக்கு பின்பு போலீஸ்சார் என்னை விசாரித்தார்களா என்றால் அன்றைய தினமே விசாரித்தார்கள். நான் காவல் நிலையத்தில் எவ்வாறு புகார் கொடுத்தேன் என்றால் நேரடியாக சென்று புகார் கொடுத்தேன். சர்வே எண்.47/6 சொத்தினை இடைத்தரகராக இருந்து எதிரி

நாச்சியப்பனுக்கு கிரையம் செய்து கொடுத்ததால் முன்கோபம் கொண்டு பொய்யாக எதிரி மீது இந்த வழக்கு கொடுத்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வது போல் எதிரி எங்கள் யாரையும் அசிங்கமான வார்த்தைகளால் பேசவுமில்லை கொலைமிரட்டல் விடுக்கவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் சம்பவத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

5. என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ1 புகார் யாரால் எழுதப்பட்டது என்றால் நான் சொல்லி காவல் நிலையத்தில் எழுதினார்கள். அதை யார் எழுதினார்கள் என்று குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால் 10 வருடங்கள் ஆனதால் குறிப்பிட்டு சொல்ல முடியவில்லை. எனது முதல் விசாரணையில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதா என்றால் ஆமாம். அ.சா.ஆ 1 புகாரிலும் முதல் விசாரணையில் உள்ள கையெழுத்துக்கும் வேறுபாடு உள்ளதா என்றால் புகாரில் தமிழில் கையெழுத்து செய்தேன், முதல் விசாரணையில் ஆங்கிலத்தில் கையெழுத்து செய்தேன்.

6. நான் இரண்டு மொழிகளிலும் கையெழுத்து செய்வேனா என்றால் எனது நாத்தனார், மாமியார் தமிழில் கையெழுத்து செய்ததால் நானும் எழுதி கையெழுத்து செய்தேன். அ.சா.ஆ1 ல் உள்ள கையொப்பம் என்னுடையது இல்லை என்று சொன்னால் சரியல்ல, அது எனது கையொப்பம் தான். வழக்கு சம்பவத்திற்கும் எதிரிக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றும், எதிரி விடுதலை செய்யத்தக்கவர் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை:** இல்லை.

16.12.2024 SC.No. 55/2017

சாட்சி : PW 2 பூபதி

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**குறுக்கு விசாரணை :**

1. அ.சா.1 செல்வி எனது அண்ணன் மனைவி என்றால் சரிதான். சர்வே எண்.47/6 சொத்தின் முழுவிவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் நான் அ.சா.1 உடன் இருந்தேனா என்றால் இருந்தேன். நான் என் முதல் விசாரணையில் சொல்லியுள்ள விவரங்கள் எனக்கு ஞாபகம் இருந்ததை சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்த விவரத்தை அ.சா.1 போலீசாரிடம் எவ்வகையில் தெரிவித்தார் என்றால் நேரில் தான் கூறினார் நாங்களும் சென்றோம். அன்றைய தினம் நடந்ததாக சொல்லப்படும் விவரங்கள் என் நினைவில் முழுவதுமாக இருக்கிறதா என்றால் தற்போது இல்லை. எனக்கு சம்பவம் குறித்து எதுவும் நேரடியாக தெரியாது என்றும், அ.சா.1 கேட்டுக்கொண்டதற்கு இணங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் எதிரி எந்த குற்ற சம்பவத்திலும் ஈடுபடவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரி மீது முன் கோபத்தில் அ.சா.1 சம்பவத்தை செய்து விட்டு எதிரி மீது பொய்யான புகார் கொடுத்துள்ளார் என்றும் அதற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை:** இல்லை.

16.12.2024 SC.No. 55/2017

சாட்சி : PW 3 சுந்தரபாண்டி

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**குறுக்கு விசாரணை :**

1. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதி , நேரம் என்னவென்றால் 02.03.2015 தேதி மாலை சுமார் 5.30 மணி ஆகும். நாங்கள் குடியிருக்கும் தெண்ணீர்வயல் கிராமத்திற்கும் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 1 கி.மீ தூரம் இருக்கும். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் நான்கு குடிசைகளை தவிர வேறு கட்டிடங்கள் இருந்ததா என்றால் இல்லை. செல்வி எனது கொழுந்தனார் உடைய மருமகள் ஆவார். மொத்தம் எத்தனை குடிசைகள் இருந்தது என்றால் 4 குடிசைகள் இருந்தது. 4 குடிசைகளும் ஒரே சேகரமாக இருக்குமா அல்லது தனித்தனியாக இருக்குமா என்றால் தனித்தனியாக இருக்கும், ஒவ்வொரு குடிசைக்கும் இடையே எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 20 அடி தூரம் இருக்கும். எரிந்ததாக சொல்லப்படும் குடிசை யாருடைய குடிசை என்றால் செல்வியின் குடிசை ஆகும். அதில் எங்களுக்கு எந்த பங்கும் கிடையாது என்றால் சரியல்ல, நான்கு நபர்களுக்கும் தான் பங்கு உண்டு.

2. அந்த சொத்தில் எங்கள் யாருக்கும் பங்கு கிடையாது என்றால் சரியல்ல. அந்த சொத்தை பொருத்து என்னையும் ஒரு தரப்பினராக காண்பித்து தேவகோட்டை உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தினை எதிரி போலியாக விற்பனை செய்து விட்டார் என்று தான் நாங்கள் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். அந்த உரிமையியல் வழக்கு எங்களுக்கு சார்பாக தீர்ப்பாக வேண்டும் என்பதால் எதிரியை மிரட்ட வேண்டும் என்ற எண்ணத்தில் செல்வியை சம்பவத்தை செய்து விட்டு எதிரி மீது பொய் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

3. உரிமையியல் வழக்கில் நாச்சியப்பன் தரப்பினராக உள்ளார் என்றால் சரிதான். அந்த கிரையப்பத்திரத்தை ரத்து செய்ய நாங்கள் நிர்பந்தம் செய்தோம் என்றும், அதை எதிரி மறுத்ததால் இந்த புகார் அவர் மீது கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் எதிரி எந்த குற்ற சம்பவத்திலும் ஈடுபடவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரி மீது முன் கோபத்தில் அ.சா.1 சம்பவத்தை செய்து விட்டு எதிரி மீது பொய்யான புகார் கொடுத்துள்ளார் என்றும் அதற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சுருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்)- திருமதி.P.கலை நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.